**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**அ.வ.எண்.54/2024**

**தேதி : 19.11.2025**

**(வா.சா.2 ) – திரு. முருகசாமி**

**சாட்சி அழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை :– (பிரதிவாதி தரப்பில்)**

1. எனது சொந்த ஊர் பாறைப்பட்டி. தற்போது எங்கு இருக்கிறேன் என்றால் தட்டான்குளம் கிராமம், பாண்டியன் நகரில் குடியிருக்கிறேன். எனக்கு ஒரு மகன், ஒரு மகள். சிவபாலாஜி என்பவர் எனது மகன். நிஷாநந்தினி என்பவர் எனது மகள். நானும், எனது மகனும் ஒரே குடும்பமாக வசித்து வருகிறோம். வேறு வேறு அறையில் இருக்கிறோம். இரண்டு குடும்பங்களும் தனித்தனியாக சமையல் செய்கிறோம். எனது மகனுக்கு சுமார் 4 வருடங்களுக்கு முன்பாக திருமணம் நடைபெற்றது. எனது மருமகள் பெயர் ஷாலினி. எனது மகளுக்கு திருமணமாகி 10 வருடம் ஆகிறது. எனது மகள் சித்தூரில் வசித்து வருகிறார். வாதிக்கும், பிரதிவாதிக்கும் 20 வருடமாக பழக்கம். பிரதிவாதியின் கணவரை தெரியுமா என்றால் தெரியும்.

2. பிரதிவாதியின் கணவரை 20 வருடமாக தெரியும். பிரதிவாதியின் அண்ணன் மகன் பாஸ்கர்ராஜ் என்பவரை தெரியுமா என்றால் பாஸ்கர்ராஜை எனக்கு தெரியும், ஆனால் அவர் பிரதிவாதியின் அண்ணன் மகன் என்ற சங்கதி எனக்கு தெரிந்திருக்கவில்லை. எனக்கு பிரதிவாதியின் அண்ணன் மகன் பாஸ்கர்ராஜ் என தெரியும் என்றும், வழக்கிற்காக தெரியாது என பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் விவசாயம் செய்து வருகிறேன். அருகில் இருக்கும் நிலங்களை அவ்வப்போது பேசி விற்றுக்கொடுப்பேன். 1990 ஆம் ஆண்டு முதல் பிரதிவாதி ஊராட்சி மன்றத் தலைவராக இருந்தார் என்றால் சரிதான். நான் அச்சமயம் மக்கள்நலப்பணியாளராக நியமிக்கப்பட்டு பணிபுரிந்து வந்தேன் என்றால் சரிதான். அது முதல் எனக்கும் பிரதிவாதிக்கும் பழக்க வழக்கம் ஏற்பட்டது என்றால் சரிதான்.

3. அப்போது நான் பிரதிவாதியுடன் வரவு செலவு செய்து வந்ததாகச் சொன்னால் சரியல்ல. நான் வரவு செலவு செய்ததற்கு ஆதாரங்கள் உள்ளது என்றும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிப்பதாகச் சொன்னால் சரியல்ல. அப்போது தொகை

நிரப்பப்படாத கடனுறுதிச்சீட்டுகள், காசோலைகளை பிரதிவாதி மற்றும் அவரது கணவர் நம்பிக்கையின் அடிப்படையில் என்னிடம் கொடுத்ததாகச் சொன்னால் சரியல்ல. என்னிடம் பிரதிவாதியின் கணவர் தாமோதரன் கிரைய ஒப்பந்தம் செய்துள்ளார் என்றால் சுமார் 15 வருடங்கள் முன்பாக அவர் இடம் கொடுப்பதாக சொல்லி என்னுடன் ஒப்பந்தம் செய்துகொண்டார். பிறகு அவர் விற்கும் எண்ணத்தை மாற்றிக்கொண்டு என்னுடன் ஆவணத்தை ரத்து செய்துவிட்டார். என்னிடம் காட்டப்படும் 26.09.2006 ஆம் தேதியிட்ட கிரைய ஒப்பந்தம் தான் நானும், தாமோதரனும் ஏற்படுத்திக்கொண்டது என்றால் சரிதான். மேற்படி 26.09.2006 ஆம் தேதியிட்ட கிரைய ஒப்பந்தம் பி.வா.சா.ஆ.1.

4. 27.02.2007 ஆம் தேதி நானும், தாமோதரனும் கிரைய ஒப்பந்தத்தை ரத்து செய்தோம் என்றும், அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் என்றாலும் சரிதான். மேற்படி 27.02.2007 ஆம் தேதியிட்ட கிரைய ஒப்பந்த ரத்து பத்திரம் பி.வா.சா.ஆ.2. நானும், பாஸ்கர்ராஜும் கடந்த 05.05.2014 ஆம் தேதி கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் சரிதான். அதில் ரூ.2,00,000/- முன்பணமாக பெற்றுக்கொண்டார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 05.05.2014 ஆம் தேதியிட்ட கிரைய உடன்படிக்கையில் உள்ள கையெழுத்து என்னுடையதா என்றால் ஆமாம். மேற்படி 05.05.2014 ஆம் தேதியிட்ட கிரைய ஒப்பந்தம் வலைதள நகல் பி.வா.சா.ஆ.3. நானும், பாஸ்கர்ராஜும் சேர்ந்து செய்துகொண்ட கிரைய ஒப்பந்தத்தை 25.08.2023 அன்று ரத்து செய்துகொண்டோம் என்றால் சரிதான். பாஸ்கர்ராஜ் ஒப்புக்கொண்டவாறு வில்லங்கமின்றி சொத்தை கிரையம் செய்து கொடுக்காததால் கிரைய ஒப்பந்தத்தை ரத்து செய்துகொண்டோம்.

5. அவ்வாறு வில்லங்கம் எதுவும் இல்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிப்பதாகச் சொன்னால் சரியல்ல. மேற்படி 25.08.2023 ஆம் தேதியிட்ட கிரைய உடன்படிக்கை ரத்து ஆவணம் பி.வா.சா.ஆ.4. எனக்கும், பாஸ்கர்ராஜுக்கும் வரவு செலவு இருந்தது என்றும், வட்டி பணம் ரூ.40,000/- பாஸ்கர்ராஜ் எனக்கு கொடுக்கவேண்டியிருந்தது என்றும் சொன்னால் சரியல்ல. அதற்கான பிரதிவாதியிடமும், தாமோதரனிடமும் ரூ.20,000/- என தொகை எண்ணால் குறிப்பிடப்பட்ட கடனுறுதிச்சீட்டுகளை நிரப்பப்படாத நிலையில் நான் பெற்றுக்கொண்டதாகச் சொன்னால் சரியல்ல. பிரதிவாதியின் கணவர் தான்

ரூ.20,000/- என்பதை இரண்டு கடனுறுதிச்சீட்டுகளிலும் எழுதினார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி ரூ.20,000/-ஐ தாமோதரன் என்னிடம் கொடுத்துவிட்டு, வெற்றுக் கடனுறுதிச்சீட்டுகளில் ஒன்றை திருப்பி வாங்கிக்கொண்டார் என்றால் சரியல்ல. தாமோதரன் கடனுறுதிச்சீட்டை வாங்கிக்கொண்டார் என்றும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிப்பதாகச் சொன்னால் சரியல்ல.

6. மற்றொரு ரூ.20,000/-க்கான கடனுறுதிச்சீட்டு என்னிடம் தான் இருந்தது என்றால் சரியல்ல. நான் வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்து வருவதாகச் சொன்னால் சரியல்ல. எனது மகனும் பைனான்ஸ் தொழில் செய்து வருவதாகச் சொன்னால் சரியல்ல. எனது மகனும், பிரதிவாதியின் குடும்பத்தினரும் எவ்வித வரவு செலவும் செய்ததில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1-ல் ரூ.20,000/-என்பதில் அதற்கு முன்பாக 4 என்ற எண் சேர்க்கப்பட்டுள்ளதாகச் சொன்னால் சரியல்ல. மேற்படி வா.சா.ஆ.1-ல் ரூ.20,000/- என்பதை ரூ.4,20,000/- என திருத்தி மோசடி செய்து நானும், எனது மகனும் சேர்ந்து வழக்கு தாக்கல் செய்துள்ளதாகச் சொன்னால் சரியல்ல. மேற்படி வா.சா.ஆ.1-ஐ நான் எனது உறவினரை வைத்து உற்பத்தி செய்துள்ளதாகச் சொன்னால் சரியல்ல.

7. பிரதிவாதியின் குடும்பத்திற்கும், தாவா கடனுறுதிச்சீட்டில் சாட்சி கையொப்பம் செய்தவரையும், தாவா கடனுறுதிச்சீட்டை எழுதியவரையும் யார் என்று தெரியாது என்றால் சரியல்ல. சாட்சி மற்றும் எழுதிய நபரையும் பிரதிவாதி பார்த்ததே இல்லை என்றால் சரியல்ல. என்னிடம் இருந்த கடனுறுதிச்சீட்டை வைத்து எனது மகனை தூண்டிவிட்டு பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதாகச் சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1-ல் முருகசாமி என சாட்சி கையொப்பம் செய்து உற்பத்தி செய்துள்ளதாகச் சொன்னால் சரியல்ல. மேற்படி கடனுறுதிச்சீட்டு செல்லாது என்றால் சரியல்ல. மேற்படி கடனுறுதிச்சீட்டை வைத்து வாதியானவர் வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பியதால் பிரதிவாதி அதிர்ச்சியடைந்து பைசல் பேசப்பட்டதாகவும், அதனால் பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதியும், அவரது கணவரும் பழனி தாலுகா காவல் நிலையத்தில் என் மீதும், எனது மகன் மீதும் புகார் கொடுத்ததாகச் சொன்னால் சரியல்ல. அவ்வாறு கொடுக்கப்பட்ட புகாருக்கு சி.எஸ்.ஆர்.எண்.668/2025-ல் 20.06.2025 அன்று ரசீது கொடுக்கப்பட்டதாகச் சொன்னால் சரியல்ல. இதுசம்மந்தமாக போலீசார் என்னையும், வாதியையும்,

பிரதிவாதியையும் அழைத்து விசாரித்தார்கள் என்றும், சிவில் நீதிமன்றத்தில் வழக்கு இருப்பதாக நாங்கள் விசாரணையில் தெரிவித்ததாகவும் சொன்னால் சரியல்ல.

8. கடனுறுதிச்சீட்டில் 1–வது சாட்சி யார் என்றால் நாட்ராயன். மேற்படி நாட்ராயனிடம் சாட்சியாக மட்டும் கையொப்பம் பெற்றுள்ளதாகவும், அவருக்கு எவ்வித சங்கதியும் தெரியாது என்றும் சொன்னால் சரியல்ல. 2–வது சாட்சியாக எனது மகனுக்காக நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றும், எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் பொய் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1–ஐ எழுதிய லோகநாதனுக்கு நோட்டை எழுதியதைத் தவிர மற்ற விபரங்கள் எதுவும் தெரியாது என்றால் சரியல்ல, மேற்படி சாட்சியை பிரதிவாதி தான் அழைத்து வந்தார். பிரதிவாதி அழைத்து வந்ததாகச் சொல்வது தவறு என்றும், பிரதிவாதிக்கு லோகநாதனை யார் என்றே தெரியாது என்றும் சொன்னால் சரியல்ல. நிரப்பப்படாத கடனுறுதிச்சீட்டை வைத்து லோகநாதனை எழுதிக்கொடுக்கச் சொன்னதால் அவர் எழுதிக்கொடுத்தார் என்றும், அவருக்கு மற்ற விபரங்கள் தெரியாது என்றும் சொன்னால் சரியல்ல.

9. வா.சா.ஆ.1 கடனுறுதிச்சீட்டு உற்பத்தி செய்யப்பட்டது என்றும், வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல. நான் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் ரூ.4,20,000/– பெற்றுக்கொண்டு 05.08.2021 அன்று கடனுறுதிச்சீட்டு எழுதிக்கொடுத்ததாக தெரிவித்துள்ளது பொய் என்றால் சரியல்ல. மேற்படி தொகையை மணிமேகலை வீட்டில் கொடுத்தேனா என்றால் என் வீட்டில் வந்து மாலை 5.00 மணியளவில் வாங்கிச் சென்றார். 05.08.2021 அன்று பணம் கொடுக்கப்பட்டதா அல்லது அதற்கு முன்பு பணம் கேட்டாரா என்றால் மேற்படி விபரம் எனது மகனுக்குத் தான் தெரியும். பிரதிவாதி 05.08.2021 அன்று எனது வீட்டில் வைத்து பணம் வாங்கவில்லை என்றும், கடனுறுதிச்சீட்டு எழுதிக்கொடுக்கவுமில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

10. கடனுறுதிச்சீட்டில் சாட்சி கையொப்பம் செய்துள்ள சாட்சியும், லோகநாதனும் எங்களுக்கு உறவினர்கள் என்று சொன்னால் சரியல்ல. அவர்கள் எனது உறவினர் என்றும், அவர்களை வைத்து மேற்படி கடனுறுதிச்சீட்டை உற்பத்தி செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் பழனி நீதிமன்றங்களில் பண

**வசூலுக்காக ஓரிரண்டு வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன். அந்த வழக்குகளில் சாட்சிகளில் மாற்றி மாற்றி போட்டதால் தள்ளுபடியானதாகச் சொன்னால் சரியல்ல. மேற்படி நோட்டை எழுதிய லோகநாதன் எந்த ஊர் என்று எனக்கு தெரியாது. நாட்ராயன் எந்த ஊர் என்று எனக்கு தெரியாது. மேற்படி இருவரையும் எனக்கு தெரியும் என்றும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிப்பதாகச் சொன்னால் சரியல்ல. உற்பத்தி செய்யப்பட்ட இவ்வழக்கை தள்ளுபடி செய்யவேண்டுமென்றும் சொன்னால் சரியல்ல.**

Taken down by me in open court and
read over to the witness in Tamil and
acknowledged by him/her to be correct.

K BHARATHI
Digitally signed by K BHARATHI
Date: 2025.11.20 10:33:01 +0530

Additional Sub Judge,
Palani.